# சொல்லும் பொருளும்

**நூ**ல் என்பது, அற உணர்வைப் பெருக்குவது, பொருள் திறத்தை விளக்குவது, இனிய நினைவை ஊட்டுவது; நிறை நலத்தை வழங்குவது, இத்தகைய நூல்கள் காலங்கள் தோறும் தோன்றும். அது பாட்டாகவும் உரையாகவும் அமையும்.

காஞ்சன மாலை என்ற நூல் காஞ்சி காமாட்சி அம்மையின் மீது பாடப்பெற்ற பாமாலை. இது கட்டளைக் கலித்துறையால் அமைந்துள்ளது. இதனை அருட்கவி காளிதாசர் அவர்கள் பாடியுள்ளார். அதற்கொரு அழகியப் பொழிப்புரையும் அவரே வரைந்துள்ளார். திறம் பாராட்டுதற்குரியது.

அருட்கவி காளிதாசர் அவர்கள் பணிவும் பண்பும் மிக்கவர். இனிமையும் எளிமையும் நிறைந்த அவர் உள்ளக்கிளர்ச்சியே காஞ்சன மாலை. இது தமிழ் அன்னைக்குப் புத்தம் புதிய பொன்னாரம். அடியேன் பார்க்க வாய்ப்பேற்பட்டமை குறித்து மகிழ்வு எய்துகின்றேன். திரு. அருட்கவி. காளிதாசர் அவர்களுக்கு எல்லாம் வல்ல அன்னையின் அருள்பாலிப்பதாக.

—அருள்ஞானப் பெருவெளித் திருத்தொண்டர்
வாழ்வியற்புலவர்.
தவத்திரு. சொ. ர. தேமொழியார்
(தலைவர், சைதைத் தமிழ்ச்சங்கம்)

# “காஞ்சனமாலை கருத்துரை”

பூக்களால் தொடுக்கப்படுவது பூமாலையாதல் போலப் பாக்களால் தொடுக்கப் படுவது பாமாலையாகும். மலர் மாலைக்கு இத்தனைதான் மலர்கள் என்ற கணக்கின்றியிருத் தல் போலப் பாமாலைக்கும் இத்தனை பாடல்கள் தான் என்ற வரையறை அமையவில்லை. பாமாலைகள் எண்ணிக்கை அளவின் காரணத்தால் நவமணிமாலை, இரட்டை மணி மாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை என வழங்குவ துண்டு. இக்காஞ்சனமாலை இருபத்தைந்து பாடல்களைக் கொண்டது, காஞ்சனம் என்பது பொன்; பொன் போன்ற அடியவர் உள்ளத்தில் அமர்ந்து பொலிவு தரும் காஞ்சி காமாட்சியம்மையின் அருள்நல மாட்சிமையைச் சொற் சுவை பொருட்சுவை நிறைந்த பாடல்களால் பாராட்டப் பெற்றமையால் இந்நூல் காஞ்சன மாலை எனப் பெயர் பெற்றது. இந்நூலின் முதற்செய்யுள், நூல் செய்யும் பொருட்டு மூலப் பொருளை முதற்கண் இறைஞ்சி அருள்பெறுதலையும் ஏனைய செய்யுட்கள் பரையாகிய அருட் சத்தியின் அருள்நல வரலாற்றைக் கூறுவதாகவும் அமைந் துள்ளன.

## 1

வன்னியில் வெம்புகை அன்ன வொலிகழல் வண்டுறையும்
கன்னியள் காஞ்சிகா மாட்சிகொள் காஞ்சன மாலையையென்
சென்னியில் செந்தமிழ்ச் சீர்த்தொடை செய்தமை
சால்பருளாய்
மன்னிய மாமறை மோதகம் மல்கிடும் ஐங்கரனே.

[கருத்துரை]

நிலைபெற்ற மாமறை எனும் ஆகமங்கள் மின்னி மிளிர்கின்ற அன்பர் அகத்தில் கருணை சிறந்து அமர்ந்து

ஒளிரும்! ஐங்கரப்பெருமானே! நாதம் ஒலிக்கின்ற திருவடியி
தீயிடையே எழுகின்ற புகையைப் போன்று வண்டுக
சூழ்ந்து 'ரீம்' என்ற மந்திரம் ஒலித்து மகிழும் இளமை
தன்மையள்; காஞ்சிமாநகரைப் பதியாகக் கொண்டவள்
அவள் அணியத்தக்க பொன்போன்ற பாமாலையைச் செ
தமிழால் சீரும் தொடையும் சிறப்புற அமையும் வகையி
பாடும் தகுதியை அடியேனுக்கு அருள்வீராக.

## 2

ஓமிசை யுள்ளொளி ஓர்ந்திட ஓதிடும் ஒண்பொருளாய்
வாமியள் வாணியள் வாசியேன் வாய்மொழி வாழ்தகவின்
நேமியள் நேத்திர மூன்ருெளிர் நேரிழை நேயசிவ
காமியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

ஓம் என்ற மந்திரத்தில் இசைந்து நிற்பவள்; அதன் உள் கிளர்ந்தெழும் ஒளியானவள்; ஒண்பொருளாய் நின்று அடியார் உணரும் வண்ணம் ஓதிடும் வாமியள்; கலையின் வடிவமாய் மலர்பவள்; கல்லாத என்போன்ருேர் மொழியும் வாழும் தகுதியை அளிப்பவள், நீதியாய் இயங்குபவள் ஒளிரும் மூன்று விழிகளையுடைய நேரிழை; சிவத்தை விரும்பி நெகிழ்ச்சியுறும் இயல்பினள்; பொன் போன்ருர் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 3

கூளியின் கூட்டொடு கூத்துறுங் கூகையின் கானெழுந்த
ஆளியின் மீதமர் அம்பிகை அன்பினர் சித்தமுறத்
தாளிணை தந்தவள் தாமதந் தானுறுந் தன்மையருட்
காளியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

பேய்க்கூட்டத்துடன் கூகைகளும் கூத்து இயற்றும் அக்காட்டில் சிங்கத்தின் மீது அமர்ந்து பொலிவு தரு

சிறப்பினள்; அன்புமிக்க அடியவர் சித்தம் உறைபவள்: என் போன்றார் உள்ளத்தில் அவள் தம் இணையடிகளைத் தந்து எம் ஆன்மாவில் உறைகின்ற இழிவாம் தமோகுணம் முதலியவற்றை அழிப்பவள்; அதனால் காளி எனப்பெயர் பெற்று அருள் புரிபவள்; பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 4

வாரணன் வேலவன் வாரியின் வாழ்பவன் வல்லசுரர்
ஆரமு தாள்பவன் அந்தகன் ஆதவன் அங்கியொடு
நாரணன் நான்முகன் நாயகன் நாடொறும் நாடவருட்
காரன காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

விநாயகன், வேலவன், வருணன் அமுதத்தைத் தன் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்ட இந்திரன், நமன், சூரியன்,அக்கினி முதலான தேவர்களுடன் திருமால்,பிரமன், நாதனும் சிவனும் தன்பால் வருங்கால் மேகத்தைப் போன்று அருள் புரிகின்றவள்; பொன் போன்றார் நெஞ்சுள் அமர் பவள்; காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 5

அற்புத அம்பரத் தாண்டருள் அந்தரி அம்பிகைசீர்ப்
பொற்பதப் பொற்சிகை பார்க்கிலாப் பொக்கமார் போதனரி
தற்புகழ் நல்கிடும் நாரியர் நாடொறும் நாமமுரை
கற்பினள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

கோலம் மிக்க அற்புதப் பரவெளியில் நின்று ஆண்டு அருள் புரிபவள்; உள்முக வெளியில் வல்லமையாய் நின்று இயங்குபவள். அவள் தன் சீர்மை மிக்க அழகிய திருவடி யும் திருமுடியும் எவரும் காண இயலாதவை; முனைப்

புடைய மாலும் அயனும் குறைபட்டு நின்றனர். நல்லடி யாருக்கு நிலைத்த புகழை அளிக்க வல்லவள். அன்பின் வடிவாய் ஆன்மாவில் இணைபவள்; திருமகளும் கலைமகளும் நாடொறும் போற்றிப் புகழும் கற்பினள்; பொன் போன்றூர் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 6

மூவிழி முச்சுடர் மூண்டவன் மூரலான் முப்புரமுன்
கூவியே நைந்திட ஏவினை ஏந்திய ஏகனணை
ஓவியத் தொப்பிலா ஒண்டொடி ஓல்லையின் ஓடைவளர்
காவியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

காமனைத் தகனம் செய்ய தன்மூன்று கண்களில் தீப் பொறி தோன்றத் திகழ்ந்தவனும் முன்னொரு காலத்தில் சிரிப்பினால் முப்புரத்தினர் (ஆணவ, கன்ம, மாயா மலக் குணத்தினர்) ஓலமிட்டு நைந்திடும் பொருட்டு திருமாலாகிய (சுத்த மாயை) அம்பினை ஏந்தியவனும் ஆகிய ஏகம்ப நாதனைத் தழுவுகின்ற ஒளிபொருந்திய வளைக்கரத்தாள்; ஓவியத்தினும் ஒப்பில்லாதவள்; ஓடையில் விரைந்து வளர்ந்து மலர்கின்ற நீலோற்பல மலர் அனைய நிறத்தினள், பொன்போன்றூர் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 7

எம்பிரான் என்றடி ஏத்திடும் எண்ணரும் ஏதமிலா
உம்பரார் வாழ்த்திட ஊனிகழ உத்தமர் உள்ளமுறும்
கொம்பரார் பூங்கொடி கொண்டலங் கொற்றவை கொக்கிறகார்
கம்பரார் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

எமது இறைவன் என்று அவன் திருவடிகளைத் துதித்தி டும் எண்ணுதற்கரிய துன்பமொன்றில்லா மேலோர்கள் வாழ்த்தும்படி, ஊனை வெறுக்கும் உத்தமர்தம் உள்ளத்தில் உறுபவள், கொழுகொம்பிற் படரும் பூங்கொடி அனையவள்; மேகத்தைப் போன்ற அழகிய கொற்றவை; கொக்கின் இறகைச் சூடிய ஏகம்பநாதரோடு பொருந்தியவள்; பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

8

விண்ணியல் ஆர்புனல் வாழ்வளி வாசியின் வெங்கனலும்

மண்ணியல் ஆனொடு வெங்கதிர் தண்கதிர் எண்குணத்தாள்

வெண்ணியல் வீறுடை வெல்விடை வெள்ளியின்
வெற்புடைய

கண்ணியர் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

விண்ணியலாம் அருள் நிறைவும் வாழ்வியலை ஊக்கும் காற்றும் வெம்மையான தீயும் புவியில் இயைந்து வாழும் ஆன்மாவுடன் சூரியன், சந்திரன் ஆகிய எட்டு வகைக் குணங்கள் உடையவள்; வெண்மையை இயல்பாகக் கொண்டு விளங்க ஆற்றலும் வெற்றியும் உடைய நந்தியம் பெருமான் தனக்கு உறுதியாகவும் இடமாகவும் கொண்டு விளங்கும் திருக்கயிலாய மலையுடைய கருத்தினர், பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 9

ஓங்கொலி ஓமென உள்ளுற ஓதிட ரீங்கரித்தாள்
ஓங்கொளி ஓமெழுத் தூடுற ஒன்றிடும் ஓவியமோர்
ஓங்கலின் ஓங்கிய ஒப்பரும் ஓமிசை ரீங்கரத்தால்
காங்கைதீர் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

மிக்கு நுட்பமாக ஒலிக்கின்ற 'ஓம்' என்னும் பிரணவத்தின் உள்ளுற நின்று ஓதிட ரீங்கரித்தவள், மூல நாதத்தை வழங்குபவள். பேரொளியாகப் பிரணவ வடிவினில் நிலைத்து சித்திரம் போல் தங்கியவள்; துரிய மலையின் மேல் விளங்குகின்ற இணையிலாத பிரணவ இசையாகிய நாதத்தால் கொடுமைகளைக் களைபவள்; பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 10

ஆரியை ஆரழல் ஆரணி ஆதியள் ஆகமத்தின்
பாரியை பாரெலாம் பாவுறும் பான்மையள் பாகமுறும்
நாரியள் நான்முகி நாரணி நாதியள் நான்மறைசேர்
காரிகைக் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

ஆன்மாக்களின் பாசபந்தங்களை அறுத்து அருள் பாலிக்கும் அன்னை; அழகிய சுடர் போன்ற காளியள், ஆதி சத்தியள், ஆகமமாகிய சிவத்தின் துணையானவள். சிவத்தின் இடபாகத்தைக் கொண்டவள், பிரமசத்தியள், நாராயணி, அண்டினவர்க்கு அருள் சுரந்து ஆதரம் அளிப்பவள். நான்மறைகள் நாடி நலம்பெறும் கருணை வடிவினாள். பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சிமா நகரில் ஆட்சி புரியும் அன்னை.

## 11

ஏரணி ஏறுறும் ஏந்தலாம் ஏகனின் என்குணத்து
நாரணி நாயகி நல்லறம் நல்கிட நாட்டமுறும்
ஆரணி அம்புலி ஆறணி அஞ்சடை ஆதியெனுங்
காரணி காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

ஆன்மாக்கள் நலம்பெறும் செயலைத் தனக்கு அணியாக உடையவனும் விடைமீது அமரும் அண்ணலும் ஆகிய ஒருவனும் எண்குணம் நிறைந்த பெருமானோடு பொருந்திய நாயகியாம் நாரணி; நல்லறம் தழைத்திட நாட்டம் கொள்ளும் ஆரணி; அழகு நிரம்பிய நிலவும் ஆறும் அணிந்து கொள்ளும் சடையினள்; ஆதி சத்தியாய் மூலகாரணமாக விளங்கியவள், பொன்போன்றார் நெஞ்சுள் அமர்பவள்; காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 12

நீட்சிகை நீணிலா நீடுறும் நீலியள் நீதமுறும்
ஆட்சியள் ஆசறும் ஆகம ஆனன ஆதனத்தின்
மாட்சியள் மாதவ மாகிய மாமயில் மாவடிவாழ்
காட்சியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

உயர்ந்த சிரசின் மீது நீள் நிலவை நிலைபெறச் சூடும் நீல நிறத்தள்; நீதியில் பொருந்தி ஆட்சி புரிபவள்; குற்றமற்ற ஆகமம் என்ற சிங்கத்தின் மேல் அமர்ந்த மாட்சிமை உடையவள்; மயில் வடிவாகி மாதவம் புரிந்த அம்மை: மாவடியில் அமர்ந்த காட்சியள், பொன்போன்றார் நெஞ்சுள் அமர்பவள், காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 13

மஞ்சுகு மாரியள் மாதவம் மல்கிய மாக்கருணை
அஞ்சுகும் ஆயநல் அம்பிகை அஞ்சொலின் ஆரணத்தள்
தஞ்சுகந் தான்பெரி தாமெனுந் தன்மையைத் தாழ்த்தியவர்
கஞ்சுகும் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

கருக்கொண்ட மேகம் என நின்றவள்; அது துளிக்கும் நீரென அருள் சுரக்கும் ஆரியள், மாதவ வடிவினள்; கருணை பெருகிய நிலையினள். ஆயும் ஆன்மாவின் புலன் ஐந்தால் வரும் குற்றங்களை உகுமாறு செய்யும் நல் அம்பிகை, அறநெறி கூறும் வேத வடிவினள். தன்னலம் பெரிது என எண்ணாத தகுதியாளர், உள் உறுமலம் உகுமாறு செய்பவள். பொன்போன்றார் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 14

எண்ணினும் எத்திசை ஏத்தினும் எங்கணும் என்றுமுள
பண்ணினைப் பாவுறப் பாடிடும் பத்தரின் பற்றுறுவாள்
ஒண்ணகை ஒண்டொடி ஒன்றுறும் ஒப்பரும் ஒண்ணுதலார்
கண்ணினள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

எந்தத் திக்கை நோக்கித் தொழுதாலும் சிந்தித்தாலும் எப்பொழுதும் விளங்கியிருக்கும் இசையினைப் பொருந்தும்படி பாடுகின்ற பத்தரின் நேயமாக விளங்கும் தன்மையினள். நகையையும் அழகுமிக்க வளையலையும் அணிந்தவள். ஒன்றினார்க்கு உற்று விளங்குகின்ற ஒப்பரிய நெற்றியில் நிறைந்து விளங்கும் ஒளி பொருந்திய கண்ணினை உடையவள். பொன்போன்றார் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 15

நண்ணிய நாயகன் நல்லிடம் நல்கிடும் நற்றவத்தள்
தண்ணியல் தாமரை தானுறை தன்மையள் தங்குபவள்
பண்ணியற் பாவினிற் பாங்குற பான்மதிப் பன்மலர்சேர்
கண்ணியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

நாயகன் விரும்பி நல்லிடமாம் இடபாகத்தை நல்கப் பெற்ற நற்றவத்தள். குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரில் தானுறையும் தன்மையள். பண்ணின் இயல்போடு கூடிய பாவினில் பாங்குறும் வண்ணம் தங்கும் இயல்புடையவள். பால் நிலவைப் போன்ற முகத்தையும் பன்மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையையும் உடையவள். பொன் போன்றூர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமாநகரை விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 16

ஆர்த்திடும் ஆணவ மாசெலாம் ஆழ்த்திடும் ஆரணத்தள்
தோத்திரம் ஓதிடத் தோன்றிடுந் தோடுடைத் தோகையவள்
ஈர்த்தருள் ஈந்திட ஏறுகை ஈடிலா ஈசனுறும்
கார்த்திகை காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

ஆர்த்திடும் ஆரவாரம் செய்கின்ற ஆணவத்தின் விளைவாகிய குற்றங்களையெல்லாம் ஆழ்ந்து போமாறு செய்யும் மறை வடிவினள். மெய்யடியார் நெகிழ்ந்து பாடும் நிலையில் வெளிப்படுகின்ற குழையணிந்த மயிலையொத்த அம்மையவள். பக்குவமுற்ற ஆன்மாக்களை ஈர்த்து அருள் புரிந்திட விடைமீது அமர்ந்து வரும் ஈசனின் இடபால் பொருந்திய கார்த்திகை என்னும் அம்மை. பொன்போன்றூர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

# 17

வன்மமில் வாய்மொழி வாழ்வினர் வாக்குறும் வாகையுற்ருள்
பன்மலர்ப் பொற்சடைப் பிஞ்சகன் பங்குறும் பார்வதியாள்
பொன்மரைப் பூம்பதம் போற்றிடும் பொக்கமில்
போதகத்தாள்
கன்மமில் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

பகைமையில்லா வாய்மை மிக்க மொழியுடையார் வாக்கினில் விளங்கும் வெற்றியாகப் பொருந்தியவள். பன்மலர் சூட்டப்பெற்ற பொன்னெளிர் சடை பொருந்திய பிஞ்சகன் றன் இடப்பாகத்தில் உறையும் பார்வதியாள். அழகுமிக்க தாமரைபோன்ற மென்மையான திருவடியைப் போற்றிடும் குற்றமில்லாத போதம் நிரம்பிய அகத்தைத் தன் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டவள். கன்மமில்லாத பொன் போன்ருர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னே.

# 18

பொங்குறு புண்ணியப் பூம்புனற் பொற்சடை பெற்றிலங்கும்
பிங்கலன் பங்குறும் பங்கயந் தங்கிய பாதமுற்ருள்
குங்குமம் குந்தளம் குண்டலம் கொண்டுறும் குண்டலினி
கங்கறு காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

மங்கலம் நிரம்பிய குங்குமத்தையும் ஆற்றல் நிரப்பிய கூந்தலேயும் மறைமொழி கேட்கும் காதையும் கொண்டு விளங்குகின்ற குண்டலியாய் எல்லேயற்று நிற்பவள். பொன் போன்ற சடையில் அருள் நலம் ததும்புகின்ற புண்ணியமாம் தெளிந்த புனல் பொருந்துமாறு விளங்குகின்ற பிங்கலன் றன் ஒரு கூருய் விளங்கி, தாமரை மலர்கள் தவம் கிடக்கும் மாட்சிமை பொருந்திய திருவடிகளே உடையவள். பொன்போன்ருர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னே.

## 19

அந்தகன் அல்லலை அன்பினால் அன்றழி ஆரமுதாள்
சந்தத சந்தன சுந்தர சந்திர சுந்தரிகொள்
அந்தரி அம்புய அம்பதம் ஆற்றிய அற்புதத்தால்
கந்தழி காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

கூற்றுவனால் வரும் துன்பத்தை எண்ணிச் சரண்புகுந்த ஆன்மாவிற்கு அன்பினால் இரங்கி, காத்து அருட்செயும் அமிழ்த மயமானவள். இடையறு நறுமணமும் பேரெழிலும் ஒளியும் துளபமாலையும் அணிந்து உள்முக ஆற்றலாய் விளங்கும் தாமரைபோன்ற பூம்பதம் ஆற்றிய அற்புத இயக்கத்தால் பற்றுக்கோடு அழியுமாறு செய்தவள். பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள், காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 20

தாந்திமித் தாண்டவந் தானமை தாரகத் தாமரைசேர்
சாந்தியைச் சாலவுஞ் சாற்றிடுஞ் சாகரச் சாமளையாள்
பூந்துகிற் பூரணி பூதலப் பூசுரர் பூணகத்துக்
காந்தியள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

'தாம்திமி' என்னும் சதியாகிய தாளவொத்துடன் கூடிய தாண்டவத்தால் அமையப்பெற்ற மூல மந்திரமாகிய ஓங்காரமாம் மலர்மிசை அணைந்ததால் சாந்த சொரூபத்தை மிகவும் தந்திடும் கடல் போன்ற வண்ணமுடையவள். பூந்துகில் அணியப் பெற்ற நிறைவாம் தன்மையுடையவள். மலர்ந்த இவ்வுலகின்கண் மாதவம் இயற்றும் அந்தணர் உள்ளத்து நிறைசுடராய் நின்று ஒளிதருபவள், பொன் போன்றார் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 21

பாமரன் பாங்குறப் பாதகம் பாற்றிய பான்மையவள்
மாமரு மாவடி மல்கிய மாமயின் மாமணியாள்
தாமரைத் தண்ணடி தாரகந் தானமர் தன்மையள்சீர்
காமரு காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

அறியாமை நிரம்பிய ஆன்மா பக்குவம் எய்திட பாதகம் என்ற மலத்தினைப் பொடிபடச் செய்த பண்புடையவள். சுத்தமாயையொடு பொருந்தி, சுத்தத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அருளைப் பெருக்கி ஊட்டும் அன்னை வடிவினள். பேரொளிப் பிழம்பாகத் திகழ்பவள். சீரை விரும்புகின்ற பொன்போன்றார் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சி மாநகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 22

அங்கியை அங்கையி னேந்திசிற் றம்பலத் தாடிமகிழ்
பங்கயப் பூங்கழற் பொற்பதப் பண்ணவன் பங்குடைய
கொங்கையள் கொங்கலர் கொன்றையங் கொத்தணி செஞ்சடைமேல்
கங்கையள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே.

[கருத்துரை]

ஆன்மாக்களின் அழுக்கை அகற்றி தூய்மையில் நிறுத்தும் பொருட்டு தம் அழகிய கையில் தீயினை ஏந்தி அறிவு வெளியில் ஆடிமகிழுகின்ற தாமரை போன்ற மென்மையான கழலையணிந்த அழகிய திருவடியை உடைய அண்ணலின் இடபாகத்தில் உறைந்து இகநலமும் பரநலமும் உயிர்களுக்கு ஊட்டுபவள். மணம் நிறைந்து தேன் துளிர்க்கின்ற கொன்றை மலராகிய அழகிய கொத்தினைத் தம்செஞ்சடை

மேல் சூடி சிறப்புச் செய்யும் அருள் வடிவானவள். பொன் போன்றூர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 23

அஞ்சனம் அப்பிடும் அங்கணி ஆரியன் அன்புறுசீர்
பஞ்சன பல்லவ பாதமும் பற்றிடும் பாங்கருள்வாள்
வெஞ்சின வெவ்வினை வீக்கியே வீடருள் வெற்புடையாள்
கஞ்சன காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

மைதீட்டி மிளிர்கின்ற அழகிய கண்களை உடையவள், பாசமாகிய கயிற்றை அறுக்கின்ற ஆன்மாவின் ஆச்சாரியனுகத் திகழும் ஐயனது அன்பினுறும் சீர்மைமிக்க பஞ்சு போன்றதும் தாமரை யொத்ததுமான திருவடிகளைப் பற்றிக் கொள்ளும் பக்குவத்தை அருள்பவள், வெஞ்சினத்தையும் இருவினையையும் வீழ்த்தி வீடருளும் வெற்பைத் தனக்கு இருப்பிடமாக உடையவள், பளிங்கனையார், பொன்போன்றூர் நெஞ்சுள் அமர்பவள். காஞ்சிமா நகரில் விரும்பி ஆட்சி புரியும் அன்னை.

## 24

தும்பையின் தூமலர் தூவுறுந் துங்கமார் துர்க்கையெனும்
அம்பையள் அப்பினை அப்பிய அஞ்சடை ஆடகஞ்சேர்
கொம்பையைக் கொண்டுறும் கொங்கையள் கொட்டமார்
கோதையுறும்
கம்பையள் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சியம்மே

[கருத்துரை]

தும்பையின் தூய வெண்மலர்களைக் கொண்டு துதிக்கப் பெறுகின்ற சுத்த சத்தியளாய் விளங்கும் அம்பிகை. புனல்

கொள் சடையினள். பொற்குமிழைக் கொண்டு விளங்கும் மார்பகத்தினள். மணம் மிகுந்த மாலையை அணிந்த கம்பை நதியைத் தன்பாற் கொண்டவள். பொன் போன் ரூர் நெஞ்சுள் அமர்பவள், காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்' புரியும் அன்னை.

## 25

சிற்பர சிட்டரின் சீர்திகழ் சித்தமார் சிம்மமுறும்

கொற்றவை கொல்புலித் தோலுடைக் காளியள் தாசரிசை

கற்பகக் காஞ்சன மாலையைக் கண்ணுற வோதியுள்கிக்

கற்பவர் காஞ்சன நெஞ்சுறுங் காஞ்சிகா மாட்சி யம்மே

[கருத்துரை]

நுண்வெளி என்னும் நாதவெளியில் நின்று ஒழுகும் ஞானியரின் சிறப்பு வெளிப்படுமாறு அவருளத்துளே அமர் பவள். சிம்மத்தைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டு வெற் றிச்செயலைப் புரிபவள். சினம் என்னும் புலியைக் கொன்று தனக்கு ஆடையாகக் கொண்டணிந்த வீரச்சிறப்பினள். அடியவர் இசைக்கும் அருள்நல நிறைவினள். அவள் தன் புகழ்பாடும் இப்பாமாலையாம் காஞ்சன மாலையைக் கற்றோர் கேட்டோர் சிந்திப்போர் என்னும் பொன் போன்ரூர் நெஞ் சுள் அமர்பவள். காஞ்சிமாநகரில் விரும்பி ஆட்சிபுரியும் அன்னை.

